# Chennai

Tracing the Untold Past of Our City




# The Making of a South Indian Metropolis: Chennai/Madras, 1919-1973

## CALL FOR ESSAYS

This call for essay proposal is issued by a group of scholars (see page 3) interested in the history of Chennai/Madras, who are based in various institutions located within or near Chennai. We hope to invite other scholars and researchers working on the history of the city to join the collective, which will support research and writing on the subject through small grants, peer support, and workshops/conferences.

We expect this project to be the beginning of a sustained multi-year effort to attract scholarly attention to the city and its history. For the most part, the history of Chennai/Madras has been the preserve of public historians outside academia, among whom S. Muthiah (whose Madras Discovered was first published in 1987) was a veritable giant.



The labours of Muthiah and other subsequent writers have ensured that the histories of many individuals and places in the city are extremely well-documented. The city now boasts a well-organized community of local historians and heritage enthusiasts, whose contributions have taken the form of a magazine (*Madras Musings*), a Facebook group with thousands of members, regular heritage walks, and many book volumes. Despite this surfeit of resources, historical studies centred around the city from within the academy remain sparse, especially in comparison with other cities in the subcontinent. Until three decades back, it could be said that urban questions had been generally marginalized in historical research about India and the subcontinent: the emergence of the nation-state was a central preoccupation for political and cultural historians, while agrarian questions dominated research on socio-economic matters. However, the 'urban turn' in historical scholarship has been underway for more than two decades now, and research on other cities in the subcontinent has yielded rich returns to various historical traditions, ranging from business history to cultural to environmental history.

**By encouraging historical research centred around Chennai/Madras within academic institutions, this project hopes to enrich the already existing histories of the city in two ways.**

First, such research promises a more relational approach to the study of people and places - i.e., by focusing less on individuals, and more on social classes, and indeed on the land itself. Such an approach also has the added benefit of moving away from the histories of elite actors and towards a broader social and ecological history of the city. Second, this project calls for a more analytical engagement with the history of the city, one that places emphasis on explaining events and processes, rather than merely describing them.

**The first iteration of the Chennai/Madras metropolitan history project focuses on the city of Chennai/Madras (including surrounding areas in the erstwhile Chingleput district of Madras Presidency) in the years between 1919 and 1973.**


Though this project is by no means limited to political history, we have relied on significant moments in the political history of the city to bookend the period under consideration. The year 1919 marked the formal end of the First World War, and the announcement of the Montagu-Chelmsford reforms in British India which ushered in limited forms of representative democracy at the provincial and local levels in Indian government. Indeed, 1919 was the last year that the Corporation of Madras was presided over by a member of the colonial bureaucracy. 1973, in turn, marks the beginning of a long interregnum when the elected council of the Corporation of Madras was suspended, and the Corporation came under the direct control of the state government. The period between 1919 and 1973 marks the maturation of national and sub-national politics in India, hastened by the transition from a British colony to a democratic republic at the national level, and the mainstreaming of Dravidian politics after a period of Congress dominance in Tamil Nadu.

Going beyond formal politics, the city was a site of significant social and spatial transformation during the years under consideration. Political change was accompanied by the Indianization of the bureaucracy, key businesses, and professions other than the law. Indian natives rapidly adopted new technologies such as electricity and motorized travel (the latter made affordable to the masses by bus operators). New neighbourhoods, schools, hospitals, cinema theatres, and other facilities were established to cater primarily to Indians.

The social character of the city also changed with new streams of migration, as well as the submergence of old connections that had flourished in earlier periods. Meanwhile, the growth of the city was accompanied by new forms of human intervention upon the land and the water bodies that dotted the landscape in this corner of the Coromandel coast. As the city expanded, many communities located in the urban periphery experienced sudden changes in their livelihoods and environments. While these processes undoubtedly had an uneven impact on different social classes, they fundamentally transformed Chennai/Madras into an Indian metropolis and gave it an identity independent of its place in the colonial urban system.

**We invite scholars interested in situating the evolution of Chennai/Madras within broader processes associated with this time period, including but not limited to:**

Histories of capitalist development, ecological change, industrialization, labour struggle, commodity trade and capital flows, militarization, democratization, administrative reform and fiscal reorganization, and the growth of the engineering and town planning professions, of print journalism, literature and cinema, and of western-style schooling and medicine. We also invite proposals that focus on marginalized occupational and caste communities within the city: fish-workers and artisans, domestic workers, petty traders, and sanitation workers.



The final output for participants will be an essay on a subject of their choice, to be collected in an edited volume. Prospective participants must be willing to contribute original and otherwise unpublished research to the project. Once selected, participants will be invited to present their work in a series of writing workshops curated by the editorial committee (with administrative and academic support from IFMR-LEAD, which is headquartered in Chennai). In addition, contributors will be provided with a stipend of Rs. 60,000 for their successful participation in the project. It is expected that the project will be completed by December 2024.

The goal of this project is to generate a lively exchange between diverse communities interested in the history of the city. Towards this end, selected applicants will be requested to write in jargon-free prose while retaining an analytical focus. The project invites proposals for essays in both Tamil and English, and all events hosted as part of the project will be bilingual in character. Translation assistance will be made available as necessary.

**Essay proposals must include the following materials:**

- A research proposal/abstract of 800-1000 words
- A methodological note, indicating sources and methods of interpretation
- A brief project timeline
- Latest CV of the applicant(s)

Please submit these materials in the form of a consolidated PDF to **chennaihistory.project@ifmr.ac.in** - the last date for submission of an essay proposal is February 9, 2024. You may also write to the above email address with any questions or requests for clarification.

# EDITORIAL COMMITTEE



**V. Geetha**
Independent Scholar



**Dr. T. Janaki**
Assistant Professor, International Institute of Tamil Studies



**John Mathew**
Associate Professor of the History of Science, Krea University



**Karen Coelho**
Professor (retired) Madras Institute of Development Studies



**Karthik Rao Cavale**
Assistant Professor of Political Economy and Urban Studies, Krea University



**Dr. G. J. Sudhakar**
Professor and Head, Historical Studies, CPR Institute of Indological Research



**Vijay Gnanaprasad**
Product Manager, Amazon, and Organiser, Empowering Communities Through Education (ECTE)

# KEY MILESTONES

**1**
**Essay Proposal Deadline**
February 9, 2024

**2**
**Results Announcement**
March 8, 2024

**3**
**Inception Workshop**
March 15, 2024

**4**
**Final Submissions**
November 29, 2024

**5**
**Closing Workshop**
December 2024

**Scan the QR Code to learn more.**


For any queries, please write to chennaihistory.project@ifmr.ac.in

LEAD LEVERAGING EVIDENCE FOR ACCESS AND DEVELOPMENT
KREA UNIVERSITY

ecte

# Chennai

Tracing the Untold Past of Our City




# ஓர் தென்னிந்தியப் பெருநகரத்தின் உருவாக்கம் : சென்னை/மெட்ராஸ், 1919-1973

## கட்டுரைகளுக்கான அழைப்பு

சென்னை/மெட்ராஸ் மாநகரச் சரித்திரத்தில் ஆர்வமுள்ள, சென்னை அல்லது அதன் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களை சேர்ந்த அறிஞர் குழு (பக்கம் 3 -யை பார்க்கவும்) ஒன்றாகச் சேர்ந்து கட்டுரை அழைப்பிற்கான இத்திட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளனர். சிறு மானியங்கள், சக ஆதரவு, மற்றும் பணித்தளங்கள்/கருத்தரங்குகள் மூலம் ஆராய்சிகளுக்கும் கட்டுரைகளுக்கும் உதவியாக இருக்கும் வண்ணம் சென்னை மாநகரத்தின் சரித்திரம் தொடர்பான பணியில் ஈடுபட்டுள்ள இதர அறிஞர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் இந்தக் கூட்டு முயற்சியில் இணைந்துக் கொள்ளும்படி நாங்கள் அழைக்க விரும்புகிறோம். பெருநகரத்திற்கும் அதன் சரித்திரத்திற்கும் நேராக அறிஞர்களின் கவனத்தை ஈர்ப்பதற்குரிய நீடித்த பலவருட முயற்சியின் ஒரு துவக்கமாக இத்திட்டம் அமையுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பெரும்பாலான பகுதியில், சென்னை/மெட்ராஸ் மாநகரின் சரித்திரம் என்பது கல்வி துறைக்கு அப்பாற்பட்ட பொது வரலாற்று ஆசிரியர்களின் புகலிடமாக இருக்கிறது, மேலும் அவர்களுக்கு மத்தியில் எஸ். முத்தையா (அவரது மெட்ராஸ் டிஸ்கவர்டு என்கிற புத்தகத்தின் முதல் பதிப்பு 1987 -ல் வெளியிடப்பட்டது) என்பவர் சிறந்த வரலாற்று ஆய்வாளராக இருக்கிறார்.



முத்தைய்யா அவர்களது பணிகளும் மற்றும் அவரைத் தொடர்ந்து வந்த இதர எழுத்தாளர்களும் மாநகரத்தின் பல்வேறு தனிநபர்கள் மற்றும் இடங்களின் (ஸ்தலங்களின்) சரித்திரம் நல்ல முறையில் ஆவணம் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்திருக்கிறார்கள். மாநகரம் தற்போது உள்ளூர் வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் பாரம்பரிய ஆர்வலர்களின் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு சமூகத்தைக் கொண்டிருக்கிறது. மேலும் அவர்களது பங்களிப்புகள் அனைத்தும் ஒரு பருவ இதழாக (மெட்ராஸ் மியூசிங்ஸ்), ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட ஒரு முகநூல் (பேஸ்புக்) குழுவாக, வழக்கமான பாரம்பரியச் சுற்றுலாக்களாக, மற்றும் பல்வேறு புத்தக தொகுப்புகளாக உருவெடுத்துள்ளன.

ஏராளமான இந்த ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டு, குறிப்பாக இந்திய துணைக்கண்டத்தின் மற்ற மாநகரங்களுடன் ஒப்பிடுகையில், கல்வித் துறைக்குட்பட்டு சென்னை மாநகரத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட வரலாற்று ஆய்வுகள் என்பது சொற்ப அளவிலேயே காணப்படுகிறன. முப்பதாண்டுகளுக்கு முன்பு வரை, இந்திய மற்றும் துணை கண்டம் பற்றிய சரித்திர ஆராய்ச்சியில் நகர்ப்புறக் கேள்விகள் என்பது பொதுவாக ஒதுக்கப்பட்டதெனச் சொல்ல முடியும்: விவசாயம் சார்ந்த கேள்விகள் சமூகப் பொருளாதார விவகாரங்களின் மீதான ஆராய்ச்சியில் மேலோங்கியிருந்த அதே வேளையில், அரசியல் மற்றும் சரித்திர வரலாற்று ஆசிரியர்களுக்கான கவலைக்குக் காரணமாகத் தேசிய அரசின் உருவாக்கம் அமைந்தது.

இருந்தாலும், சரித்திரப் புலமையில் காணப்பட்ட ‘நகர்ப்புறத் திருப்பம்’ என்பது இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்ற மற்ற மாநகரங்களின் மீதான ஆராய்ச்சி என்பது தொழில், வரலாறு, கலாச்சாரம் முதல் சுற்றுச்சூழல் சரித்திரம் வரைப் பல்வேறு சரித்திரப் பாரம்பரியங்களுக்கான பலதரப்பட்ட பலன்களை பெற்றுத் தந்தது.

**கல்வி நிறுவன வரம்பிற்குள் சென்னை/மெட்ராஸ் மாநகரை மையமாகக் கொண்டு நடைபெறும் சரித்திர ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம், முன்னரே காணப்படும் மாநகரின் சரித்திரத்தை இரண்டு வழிகளில் செழிப்பூட்ட இத்திட்டம் நம்பிக்கைக் கொண்டுள்ளது.**

முதலில், அத்தகு ஆராய்ச்சி என்பது தனிநபர்கள் மீது குறைவாகவும் மற்றும் சமூக வர்கங்கள் மீது, உண்மையில் நிலத்தின் மீது அதிக கவனம் செலுத்துவதன் மூலம் மக்கள் மற்றும் ஸ்தலங்களின் ஆய்வுக்குரிய தொடர்புடைய அணுகுமுறைக்கு உறுதியளிக்கிறது. அத்தகைய ஒரு அணுகுமுறை என்பது சமுதாயத்தின் முக்கியப் பொறுப்புகளில் இருக்கும் மனிதர்கள் பற்றிய சரித்திரித்திலிருந்து மாநகரத்தின் பரந்த சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் சரித்திரத்திற்கு நேராகத் திரும்புவதற்குரிய ஒரு கூடுதல் பலனையும் பெற்றிருக்கிறது. இரண்டாவது, இத்திட்டம், நிகழ்வுகள் மற்றும் செயல்முறைகளை விவரிக்கச் செய்யும் செயலுக்கு மாறாக, அவற்றை விளக்கிக் கூறுவதை வலியுறுத்தும் மாநகரச் சரித்திரத்துடன் கூடிய அதிகப் பகுப்பாய்வு ஈடுபாட்டிற்கான ஒரு அழைப்பை விடுக்கிறது.


**சென்னை/மெட்ராஸ் மாநகர சரித்திரத் திட்டத்தின் முதல் மறுநடவடிக்கை என்பது 1919 மற்றும் 1973 -க்கு இடைப்பட்ட காலங்களில் காணப்பட்ட சென்னை/மெட்ராஸ் மாநகரத்தின் (மதராஸ் மாகாணத்தின் முன்னாள் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சுற்றிலும் காணப்பட்ட பகுதிகள் உட்பட) மீதே கவனம் செலுத்துகிறது.**

இத்திட்டம் எவ்வகையிலும் அரசியல் சரித்திரத்திற்குட்படவில்லை என்றாலும் கூட, நம் கவனத்திற்குட்பட்ட காலத்திற்கு முன்னும் பின்னும் சேர்ப்பதற்கு வசதியாக மாநகரத்தின் குறிப்பிடத்தகுந்த அரசியல் சரித்திர தருணங்களை நாம் சார்ந்திருக்கிறோம். 1919 ஆம் ஆண்டு முதல் உலகப்போரின் அதிகாரப்பூர்வ முடிவாகவும் மற்றும் இந்திய அரசாங்கத்தின் மாகாண மற்றும் உள்ளூர் மட்டத்திலான சார்புநிலை ஜனநாயகத்தின் குறைந்தபட்ச அளவிற்கான உதவியாக (வழிகாட்டியாக) அமைந்த ஆங்கிலேய இந்தியாவின் மொன்டாகு-செம்ஸ்போர்டு அறிவிப்பாகவும் குறிக்கப்பட்டுள்ளது. உண்மையில், 1919 ஆம் ஆண்டு தான் மெட்ராஸ் கார்ப்ரேஷனில் காலனி அதிகாரத்திற்குட்பட்ட ஒரு உறுப்பினர் தலைமை ஏற்ற கடைசி வருடமாகும். 1973 -ல், முறைப்படி, சென்னை கார்ப்ரேஷனின் தேர்வு செய்யப்பட்ட மன்றம் (மாநகர சபை) தகுதி நீக்கம் செய்யப்பட்ட போது, அது ஒரு நீண்ட கால ஆட்சிக்கான துவக்கமாக அமைந்து, கார்பரேஷன் மாநில அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குக் கீழ் வந்தது.

1919 மற்றும் 1973 -க்கு இடைப்பட்ட காலக்கட்டம் என்பது தேசிய அளவில் ஆங்கிலேயேக் காலனியிலிருந்து ஜனநாயகக் குடியரசு மாற்றத்தினால் துரிதப்படுத்தப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியலின் முதிர்ச்சி பெற்ற காலமாகவும் மற்றும் தமிழகத்தில் காங்கிரஸ் ஆதிக்க காலத்திற்குப் பின்னர் திராவிட அரசியல் மேலோங்கி வரும் காலமாகவும் குறிக்கப்படுகிறது.

அதிகாரபூர்வ அரசியலையும் தாண்டி, மாநகரம் என்பது கவனத்திற்குட்பட்ட வருடங்களின் போது குறிப்பிடத்தகுந்த சமூக மற்றும் இடஞ்சார்ந்த மாற்றத்திற்கான ஒரு தளமாக இருந்தது. அரசியல் மாற்றம் என்பது அதிகாரவர்க்கம், முக்கியத் தொழில்கள், மற்றும் சட்டத்தை தவிர்த்த இதர உத்யோகங்கள் ஆகியவற்றின் தேசியமயமாதலுடன் (இந்தியமயமாதலுடன்) இணைசேர்ந்தது. இந்திய மக்கள் மின்சாரம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து (பின்னர் வந்த பேருந்து இயக்குநர்கள் பொதுமக்களுக்கு செலவுகுறைந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தினர்) போன்ற புதிய தொழில்நுட்பங்களை விரைவாக ஏற்றுக்கொண்டனர். இந்தியர்களுக்கு முதன்மை சேவையை வழங்க புதிய சுற்றுப்புறம், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், சினிமா அரங்கங்கள், மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் குடிப்பெயர்ந்த காரணத்தால் புதிய உறவுகள் உதயமாகவும், பண்டைய காலங்களில் செழிப்புடன் காணப்பட்ட உறவுகளில் மாற்றமும் ஏற்பட்டு அதன் காரணமாக புதிய மாநகரத்தின் சமூக குணநலன் மாற்றத்திற்குட்பட்டது.

அதே சமயம், சோழ மண்டலக் கடற்கரை ஓரமாக அமைந்திருந்த நிலப்பரப்பிற்குள் காணப்பட்ட நிலங்கள் மற்றும் நீர்நிலைகள் மீதான புதிய மனிதத் தலையீடும் மாநகரத்தின் வளர்ச்சிக்கு உடன் நின்றது. மாநகரம் விரிவடைந்த காரணத்தால், நகரத்தின் புறஎல்லையில் குடியிருந்த பல்வேறு சமுதாயங்களும் தங்களது வாழ்க்கையிலும் சுற்றுச்சூழலிலும் திடீர் மாற்றங்களை அனுபவித்தார்கள். இந்த செயல்முறைகள் சந்தேகமின்றி பல்வேறு சமூக வர்கங்களிடையே சீரற்ற ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய போதும், அவை அடிப்படையில் சென்னை/மெட்ராஸ் மாநகரத்தை இந்திய பெருநகரங்களில் ஒன்றாக மாற்றம் செய்து காலனி நகர அமைப்பில் அதற்கென ஒரு சுதந்திரமான அடையாளத்தைக் கொடுத்தது.



முதலாளித்துவ வளர்ச்சி சரித்திரம், சுற்றுச்சூழல் மாற்றம், தொழிற்மயமாதல், தொழிலாளர் போராட்டம், சரக்கு வர்த்தகம் மற்றும் மூலதன ஓட்டம், இரணுவமயமாதல், ஜனநாயகமயமாதல், நிர்வாகச் சீர்திருத்தம், நிதி அங்கீகாரம், பொறியியல் மற்றும் நகர திட்டமிடல் வேலை பொறுப்புகள், அச்சுப் பத்திரிகையியல், இலக்கியம், சினிமா, மேலை நாட்டுக் கல்வி முறை மற்றும் மருந்து ஆகியவற்றின் வளர்ச்சி போன்ற காரியங்கள் உட்சேர ஆனாலும் அவற்றுக்குள் மட்டுமே கட்டுப்படாத, இக்காலக்கட்டத்துடன் சேர்ந்துள்ள விரிவான செயல்முறைகளுக்குள் சென்னை/மெட்ராஸ் மாநகரத்தின் பரிணாம வளர்ச்சியைத் தொடர்புபடுத்துவதில் ஆர்வமுள்ள அறிஞர்களுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

**பங்கேற்பாளர்களுக்கான இறுதி வெளியீடு என்பது அவர்களது விருப்பத் தலைப்பின் கீழ் ஒரு கட்டுரையை எழுதி அதை ஆசிரியர் தொகுப்பின் கீழ் சேகரிப்பதாகும். இதில் பங்கெடுக்க சாத்தியமுள்ள பங்கேற்பாளர்கள் தங்களது அசல் மற்றும் அது வரை வெளியிடப்படாத திட்டத்திற்கான தங்களது அராய்ச்சியைப் பகிர்ந்தளிக்க ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.**

இதில் தேர்வு செய்யப்பட்டவுடன், ஆசிரியர் குழுவின் (சென்னையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள IFMR-LEAD நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் கல்வி ஆதரவு பெற்றவர்கள்) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொடர் எழுத்தாளர் பட்டறைகள் ஒன்றில் தங்களது ஆய்வுக் கட்டுரையை முன்வைக்க பங்கேற்பாளர்கள் அழைக்கப்படுவார்கள். கூடுதலாக, இத்திட்டத்தில் வெற்றிகரமாகத் தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளப் பங்கேற்பாளர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டச் சிறப்பான கட்டுரைகளுக்கு உதவித்தொகையாக ₹60,000/- வழங்கப்படும். இத்திட்டம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் இலக்கு என்பது மாநகரச் சரித்திரத்தில் ஆர்வம் கொண்டுள்ள பல்வேறு வகையான சமூகங்களுக்கிடையே ஒரு உயிருள்ள பிணைப்பை (பரிமாற்றத்தை) ஏற்படுத்துவதாகும். இதன் முடிவில், தேர்வு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் பகுப்பாய்வு நோக்கத்தை நிலைநிறுத்திய அதே வேலையில், எளிய நடையில் ஒரு கட்டுரையை எழுதக் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

இத்திட்டம் கட்டுரைக்கான விண்ணப்பங்களை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் வரவேற்கிறது, மேலும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகளும் இருமொழி கொண்டதாகவே நடத்தப்படும். தேவைக்கேற்ப மொழியாக்க உதவியும் வழங்கப்படும்.

**கட்டுரை விண்ணப்பங்களில் பின்ரும் காரியங்கள் கட்டாயம் உட்பட்டிருக்க வேண்டும்:**

- 800 - 1000 வார்த்தைகள் கொண்ட ஆராய்ச்சி விண்ணப்பம் / சாரம்சம்
- பொருள் விளக்கத்தின் ஆதாரம் மற்றும் முறைகளை சுட்டிக்காட்டும் முறைரீதியான ஒரு குறிப்பு.
- ஒரு சுருக்கமான திட்டக் காலம்.
- விண்ணப்பதாரர்(களின்) சமீபத்திய விவர குறிப்பு

மேற்காணும் விவரங்களை ஒரு ஒருங்கிணைந்த PDF ஆவணமாக **chennaihistory.project@ifmr.ac.in** என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கட்டுரை விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டிய கடைசி தேதி பிப்ரவரி 9, 2024 ஆகும். மேலும் உங்களது சந்தேகங்கள் அல்லது கேள்விகளை நிவர்த்தி செய்துக்கொள்ள நீங்கள் மேற்காணும் மின்னஞ்சலுக்கு ஐயங்களை அனுப்பி வைக்கலாம்.

## ஆசிரியர் குழு

- வீ. கீதா, தன்னிலை அறிஞர்
- முனைவர் து. ஜானகி, உதவிப் பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழர் புலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தாம்பரம், சென்னை
- ஜான் மேத்யூ, உதவி பேராசிரியர், அறிவியல் சரித்திரம், கிரியா பல்கலைக்கழகம், சென்னை
- காரேன் கொயேலோ, பேராசிரியர் (ஓய்வுபெற்றவர்), கல்விவளர்ச்சி சென்னை பல்கலைக்கழகம், சென்னை
- கார்த்திக் ராவ் கவாலே, உதவி பேராசிரியர், அரசியல் பொருளாதாரம் மற்றும் நகர்ப்புற கல்வி, கிரியா பல்கலைக்கழகம், சென்னை
- மரு. ஜி.ஜே. சுதாகர், பேராசிரியர் மற்றும் தலைவர், சரித்திர ஆய்வுகள், இன்டோலாஜிகள் ஆராய்ச்சி (CPR) நிறுவனம், சென்னை

## முக்கிய நிகழ்வுகள்

1. கட்டுரை விண்ணப்பங்களை சமர்பித்தல்: **பிப்ரவரி 9, 2024**
2. முடிவுகளை அறிவித்தல்: **மார்ச் 8, 2024**
3. பட்டறை துவக்கம்: **மார்ச் 15, 2024**
4. இறுதி சமர்பிப்பு: **நவம்பர் 29, 2024**
5. பட்டறை முடிவுக்கு வருதல்: **டிசம்பர் 2024**

**Scan the QR Code to learn more.**

For any queries, please write to chennaihistory.project@ifmr.ac.in